மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, விதிமுறைகளுக்கு ஏற்பத்தான் விடுப்பு கொடுக்கப்படுகிறது. ஆகவே, அதிலே எந்தவிதமான மாற்றமும் செய்ய முடியாது, ஆனாலும், அதிகமான நாட்கள் விடுப்பு எடுக்கின்ற நேரத்தில் இதற்காகத் தற்காலிகமாக ஆசிரியர்கள் நியமிக்கப்படுகிறார்கள்.

அடையாற்றின் குறுக்கே பாலம்.

*வினா எண் 495—திரு. பம்மல் நல்லதம்பி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் தொகுதியில் அனகாபுத்தூருக்கும் குன்றத்தூருக்கும் இடையிலே ஓடும் அடையாறு ஆற்றின் குறுக்கே பாலம் கட்டும் திட்டம் உண்டா ?

(ஆ) அந்தத் திட்டம் எப்போது நடைமுறைப்படுத்தப்படும் ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம்.

(ஆ) அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. பம்பல் நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே அனக்காபுத்தூருக்கும் குன்றத்தூருக்கும் இடையிலே இருக்கிற அடையாறு ஆற்றில்—அந்த அடையாறு ஆற்றுக்குக் கூட **இருந்தால், எனக்கு இவ்வளவு காலமாக அந்தப் பாலம் அமைக்கவில்லையே என்று சொல்லும். அந்த அளவுக்கு நீண்டகாலமாக அங்கே பாலம் தேவை என்று அங்கேயிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர் பலமுறை சொல்லியும் நடைமுறையில் இல்லை, ஆனால் ஆமென்று அமைச்சரவர்கள் சொல்கிறாகள், எப்பொழுது நடைபெறும் அதற்கு மதிப்பீடு தொகை அளிக்கப்பட்டு விட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 9-40]

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு தலைவர் அவர்களே, அந்த பாலத்திற்கு ** இல்லாத காரணத்தினால்தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவேதான் இந்தக் கேள்வி எழுப்பப்பட்டிருக்கிறது. குறிப்பாக இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில், அனகாபுத்தூருக்கும் குன்றத்தூருக்கும் இடையீலே ஓடும் அடையாறு ஆற்றின் குறுக்கே...... (குறுக்கீடு)

[1981 மார்ச் 26

மாண்புமிகு பேரவைத் தலைவர் பாலத்திற்கு * * இருந்தால் என்று அவர் ஆரம்பித்தார். அவரும் ஆற்றுக்கு * * இல்லாததால் சட்டமன்ற உறுப்பினருக்கு இருக்கிறது என்று சொன்னார்.

திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, தயவு செய்து பேசிய வார்த்தையைக் கவனித்துச் சொல்ல வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அவர்கள் சொல்லுகிறபோது ஆற்றுக்கு * * இருந்தால் அந்த ஆறு கூட எனக்குப் பாலம் இல்லையே என்று கேட்டு இருக்கும் என்று அந்த ஆற்றின் குறையை அவர் எடுத்துச் சொன்னார். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லுகிறபோது ஆற்றுக்கு * * இல்லாத காரணத்தால்தான் கேட்பவருக்கு * * கொடுக்கப்பட்டிருக்கிறது என்று உறுப்பினரைக் கருதிச் சொன்னார்கள். அப்படிச் சொல்லுகிறபோது அதிலே ஏற்படுகிற தாரதம்மியத்தைத் தலைவர் அவர்கள் உணர்வார் என்று நான் நம்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே கேள்வி கேட்ட நண்பர் மக்களுடைய பிரதிநிதியாக வந்து இந்தக் கேள்வியைக் கேட்டார். ஆகவே ஆற்றுக்கு * * இல்லை அதனாலே பேச முடியாது; மக்கள் அந்த ** உபயோகப்படுத்துங்கள் என்று சொல்லி பேச வைத்திருக்கிறார்கள் என்றுதான் பொருள். அது வேண்டாமென்றால் நீக்கி விடலாம்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: இந்தப் பணி 1979–89ஆம் ஆண்டு இரண்டாவது பகுதித் திட்டத்தின் கீழே சேர்க்கப்பட்டது. இதற்கிடையிலே இந்த சென்னை புறவழிச் சாலையை மேம்பாடாக்க வேண்டும் என்று ஒரு திட்டம் கொண்டு வரப்பட்டதன் காரணமாகத் தான் இது நிலுவையில் இருந்து வந்திருக்கிறது, ஆனாலும் உடனடியாக வேலையை ஆரம்பிக்க வேண்டும் என்று சொல்லி 30,80,000 ரூபாய் அதற்கு நிதி தேவை என்று மதிப்பீடு கொடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. பம்மல் நல்லதம்பி: தலைவர் அவர்களே, மத்திய சர்க்கார் என்றைக்கு அந்தப் பாதையை சீராக்க இருக்கிறார்கள் என்று தெரியாது. ஆனால் நம்முடைய மாநில அரசு அந்தப் பாலத்தை உடனடியாக கட்டுவதற்கு இந்த மதிப்பீட்டை துரிதப் படுத்தி நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

1981 மார்ச் 26]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : : தலைவர் அவர்களே, உடனடியாக துரிதப்படுத்தப்படுகின்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தக் கேள்வியில் வந்த* என்ற வார்த்தைகளை நீக்கிவிடும்படி உத்தரவிடுகிறேன்.

ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள டிராக்டர்கள்.

*வினா எண் 496—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தமிழ் நாட்டில் அனைத்து ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள டிராக்டர்கள் ஏன் செயலிழந்து உள்ளன ?

(ஆ) அவர்களிடம் உள்ள டிராக்டர்களை விவசாயிகளுக்குக் குறைந்த வாடகைக்கு கொடுக்கும் உத்தேசம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஊராட்சி ஒன்றியங்களில் டிராக்டர்களை வாடகை விடுவதன் மூலம் கிடைக்கும் வருமானம் டிராக்டர்களைப் பராமரிக்கும் செலவினங்களை ஈடு செய்யவில்லை. தனியார்களும், கூட்டுறவு நிறுவனங்களும் டிராக்டர் மற்றும் விவசாயக் கருவிகளை வாங்கி வாடகைக்கு விடுவதால் ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள டிராக்டர்களுக்குத் தேவை குறைவாக உள்ளது. அப்படியிருந்தும் சில ஊராட்சி ஒன்றியங்களில் நல்ல முறையில் டிராக்டர்கள் செயல்படுகின்றன.

(ஆ) ஊராட்சி ஒன்றியங்களுக்குச் சொந்தமான டிராக்டர்கள் குறைந்த வாடகைக்கு விடப்படுகின்றன. மேலும் குறைந்த வாடகைக்கு விடும் உத்தேசம் இல்லை.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் நாட்டில் உள்ள ஊராட்சி ஒன்றியங்களில் மொத்தம் எவ்வளவு டிராக்டர்கள் இருக்கின்றன ? அவைகளில் எத்தனை செயலிழந்து இருக்கின்றன ? அதனால் அரசுக்கு வருகின்ற வருமானம் எவ்வளவு என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, மொத்தமுள்ள 376 ஊராட்சி ஒன்றியங்களில் 340 டிராக்டர்கள் இருக்கின்றன. அதிலே 155 டிராக்டர்கள் நல்ல நிலையில் இருக்கின்றன. 178 டிராக்டர்கள் பழுதடைந்திருக்கின்றன. உபயோகப்படுத்த முடியாத டிராக்டர்கள் 7 இனங்கள் இருக்கின்றன.

---

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.